**<u>சார்பு நீதிமன்றம், செஞ்சி</u>**

**அ.வ.எண்.124/2022** **நாள்.16.12.2024**

2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேமா | தொழில் | |
| த.பெ/க.பெ. | மணிவர்மன் | சாதி | |
| கிராமம் | கனகம்பாளையம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 43 |

**<u>வா.சா.1</u>**
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் **1-ம்** சாட்சி ஆவேன். நான் வா**.சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>ஆவணங்கள்</u>**

1. வா.சா.ஆ-1 வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலோடு ஒப்பிடப்பட்டது)
2. வா.சா.ஆ-2 29.11.2006 மங்கையம்மாள் லட்சுமி மற்றும் பலருக்கு எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தின் இணையவழி சான்றிட்ட நகல்
3. வா.சா.ஆ.3 24.05.2010 வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல்
4. வா.சா.ஆ-4 06.06.2019 1,2 பிரதிவாதிகள் 3,4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த விற்பனை ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல்.
5. வா.சா.ஆ-5 06.06.2019 1,2 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விற்பனை ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல்.
6. வா.சா.ஆ-6 16.03.2021 லட்சுமி அம்மாளின் இறப்பு சான்றிதழ் கணினி நகல்.
7. வா.சா.ஆ-7 31.03.2021 இணையவழி வில்லங்க சான்றிதழ் கணினி நகல்.
8. வா.சா.ஆ-8 23.04.2021 நில அபகரிப்பு புகாரின் அலுவலக நகல்.
9. வா.சா.ஆ-9 வாதி சார்பதிவாளருக்கு அனுப்பிய கடித நகல்.
10. வா.சா.ஆ-10 23.04.2021 மாவட்ட பதிவாளர் விழுப்புரம் மாவட்ட பதிவாளர் திண்டிவனம் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் அசல்.

11. வா.சா.ஆ-11 03.06.2021 வாதி முதல்வர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய புகார் மனுவின் அலுவலக நகல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)